DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

............

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE AT PALLIPATTU

Calendar

Miscellaneous

Preliminary Register Case No.C.C. 93 of 2023 PW :1

Sessions

Prosecution

Deposition of witness for Defence

Court

Name : திரு. A. முரளி

Father's Name : திரு. ஆறுமுகம்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age : 55

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.07.2026

**தேதி. 17.07.2026 ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 93/2023 அ.த.சா.1 திரு. A. முரளி த/பெ. திரு. ஆறுமுகம் வயது 55 அவர்களை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் தற்போது D3 கனகம்மசத்திரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிசெய்து தற்போது அயற்பணியாக திருத்தணி மலைப்பகுதி தனிப்பிரில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். கடந்த 16.05.2017 ம் தேதி மாலை மணியளவில் நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. வெங்கடேசன் மற்றும் உதவி ஆய்வாளர் திரு. கண்ணய்யன் ஆகிய மூவரும் மாலை ரோந்து அலுவலக பொதட்டுர்பேட்டை காவல் நிலைய தலைமறைவு எதிரிகளை கண்காணித்துக்கொண்டு மேல் பொதட்டுர், கோணசமுத்திரம், கொத்த குப்பம், பாத்தகுப்பம் ஆகிய கிராமங்களை கண்காணித்துக்கொண்டு கடைசியாக அத்திமஞ்சேரிப்பேட்டை கூட்டுச்சாலை அருகே வரும் போது வேகமாக வந்த டாடா ஏசி TN 20 CC 3431 என்ற பதிவெண் கொண்ட டாடா ஏஸ் உதவி ஆய்வாளர் நிறுத்தி வாகனத்தினை சோதனை செய்ய முற்றபட்டபோது வாகனத்தை ஓட்டிவந்த ஓட்டுநர் வாகனத்தை நிறுத்திவிட்டு தப்பிஓடிவிட்டார். வாகனத்தை சோதனை செய்த போது மேற்படி வாகனத்தில் 20 கிலோ பிடிக்கக்கூடிய எடைக்கொண்ட 20 மூட்டைகளில் ஆற்று மணல் இருந்தது. பின்னர் ஓட்டுனரை பற்றி விசாரணை செய்தபோது அவர் பெயர் சுரேஸ், த/பெ. கிருஷ்ணன், நெல்லிகுன்றம் நகர், அத்திமஞ்சேரிபேட்டை என்று அருகில் இருந்தவர்கள் தெரிவித்தார்கள். பின்னர் மேற்படி ஆற்றுமணலை புண்ணியம் கிராமம் அருகே உள்ள குசஸ்தலை ஆற்றில் இருந்து மேற்படி மணல் மூட்டைகளை திருடி வந்ததாக தெரியவந்தது. மேலும் ஆற்று மணலை அரசின் அனுமதியின்றி எடுத்து வந்ததற்காகவும் நீர்நிலையான ஆற்றின் நீர்

ஆதாரத்தினை கெடுக்கும் வகையில் மணலை திருடி வந்த குற்றத்திற்காகவும் வாகனத்தினை ஆற்றுமணலுடன் கைப்பற்றுதல் மகசர் மூலம் போலிஸ் சாட்சிகளாகிய எங்கன் முன்னிலையில் கைப்பற்றினார். அதில் நானும் என்னுடன் இருந்த சிறப்பு உதவி ஆய்வளார் திரு. வெங்கடேசன் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொபப்பம் என்னுடையது தான். **அது அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சம்பவ இடத்தினை உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார். அதில் நானும் என்னுடன் இருந்த சிறப்பு உதவி ஆய்வளார் திரு. வெங்கடேசன் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அது அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் கைப்பற்றிய வழக்கு சொத்தினையும் நிலையம் வந்து காவல் நிலைய குற்ற எண் 115/2018 ன் கீழ் இ.த.ச 379, 430 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். என்னிடம் தற்போது காட்டப்படும் இரண்டு புகைப்படங்களில் உள்ள டாடா ஏஸ் வாகனம் தான் அன்றைய தினம் சம்பவயிடத்தில் விட்டுச்சென்றது. **அந்த புகைப்படங்கள் –2 அ.த.ச.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு குறித்து உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

வழக்கில் புகார்தாரரும் விசாரணை அதிகாரியும் உதவி ஆய்வாளர் தான் என்றால் சரிதான். புகாரிலும் மகசரிலும் வாகனம் எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி வந்தது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நானும் உதவி

ஆய்வாளரும் சோதனைக்கு செல்லும்போது என்னென்ன பேப்பர் கொண்டு சென்றோம் என்றவிவரம் எனக்கு ஞாபகமில்லை. வாகனம் எந்த வகையான வாகனம் என்று குறிப்பிட்டு கூறமுடியாது என்றால் TATA ACE ஆகும். வாகனம் எந்த கம்பெனி என்றால் எனக்கு ஞாபகமில்லை. இவ்வழக்கு சம்பந்தமாக பொதுப்பணித்துறையினரிடம் இருந்தோ, கனிம வளத்துறையினரிடமிருந்தோ பொதுமக்களிடமிருந்தோ எந்த ஒரு புகாரும் வரவில்லை என்றால் சரிதான். சம்பவத்தின் போது நான் இருந்ததற்கான ஆதாரமாக பொது நாட்குறிப்பு அல்லது Movement Diary எதையும் எனது மேல் அதிகாரியிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். களவாடப்பட்ட சொத்து யாருக்கு எவ்வளவு ரூபாய்கு விற்பனை செய்ய கொண்டு சென்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக பொதுமக்களை யாரும் சாட்சிகளாக எனது உயர்அதிகாரி விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். நான் மேல் அதிகாரி என்ன உத்தரவு பிறப்பிக்கிறாரோ அந்த உத்தரவுக்கு கீழ் பணிபுரியும் ஒரு காவல் அதிகாரி என்றால் சரிதான். நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும் எனது உயர் அதிகாரியின் உத்தரவின் பேரில் அவருக்கு ஆதவராக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

ஒப்பம் – **K. வெங்டேசன், B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்
**பள்ளிப்பட்டு(FAC)**